# இலட்சியப் பிள்ளை
# இலட்சியப் பெற்றோர்
# இலட்சிய ஆசிரியர்

இலங்கை யுனெஸ்கோ தேசிய சபை

A. KUMARATHASAN
49 KALAIMAGAL R...
ARIYALAI W...
JAFFNA

தாய்

# இலட்சியப் பிள்ளை

ஸ்ரீ அவ்ரோ பிண்டோ ஆச்சிரமம்
பாண்டிச்சேரி

2-CM 002643 -3,000 (2003/03)

# இலட்சியப் பிள்ளை
# இலட்சியப் பெற்றோர்
# இலட்சிய ஆசிரியர்

**தமிழாக்கம்**
ஏ. எச்.முஹம்மத்

**பதிப்பாசிரியர்**
பா. சி. சர்மா

வெளியீடு
இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு
28, லெஸ்லி ரணகல மாவத்தை, கொழும்பு 08

3-CM 002643

# இலட்சியப் பிள்ளை

ஒரு பிள்ளை எப்போதும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டியவை.

ஒரு பூர்த்தியான உண்மையின் தேவை.
உண்மையின் இறுதி வெற்றியில் சந்தேகமில்லாமை
பெற்றுக் கொள்வதில் விருப்பத்துடன் இடையுறாத முன்னேற்றத்தின்
சாத்தியக்கூறு.

**ஒரு இலட்சியப் பிள்ளை**

நல்ல சுபாவமுடையவராய் இருப்பார்.

தீர்மானங்கள் அவருக்குச் சார்பாக இல்லாவிடினும் விடயங்கள் அவருக்கு எதிராகத் தென்பட்டாலும் அவர் சினமுறமாட்டார்.

**துணிச்சல்**

அவர் எதைச்செய்தாலும் அவருடைய சக்திக்கேற்ப மிகத் திறமையாகச் செய்வதுடன் சில தடைகள் ஏற்பட்டாலும் மீண்டும் மீண்டும் செய்து கொண்டேயிருப்பார்.

**உண்மையுள்ளவர்**

விளைவு எதுவாக இருப்பினும் உண்மையைச் சொல்ல ஒரு போதும் அஞ்சமாட்டார்.

**பொறுமையுள்ளவர்**

அவருடைய முயற்சிக்குப் பிரதி பலனைக் காண்பதற்கு நீண்ட காலம் எடுத்த போதிலும் அவர் அதைரியப்படுவதில்லை.

**நிலைத்துநிற்கும் தன்மையுள்ளவர்**

தவிர்க்க முடியாத சங்கடங்களுக்கும் இன்னல்களுக்கும் முணுமுணுக்காது முகங்கொடுப்பார்.

**விடாமுயற்சியுள்ளவர்**

எவ்வளவு காலம் போனாலும் அவருடைய ஊக்கத்தில் தளர்ந்து விடமாட்டார்.

**சமநிலையிலிருப்பார்**

வெற்றியிலும் தோல்வியிலும் சமநிலையிலிருப்பார்.

**துணிவாக இருப்பார்**

பல தோல்விகளை எதிர்நோக்கிய போதிலும் இறுதி வெற்றிக்காக எப்போதும் போராடிக் கொண்டேயிருப்பார்.

**மகிழ்ச்சியாக இருப்பார்**

எச் சந்தர்ப்பத்திலும் எவ்வாறு புன்னகை பூத்து மகிழ்ச்சிகரமான உள்ளத்தை வைத்திருப்பது என்பதனை அவர் அறிவார்.

**பணிவாக இருப்பார்**

தனது வெற்றியில் கர்வம் கொள்ளவோ, தன்னை தனது சகாக்களை விட மேன்மையானவர் என்று உணரவோ மாட்டார்.

**தாராளமனம் உள்ளவர்**

அவர் பிறரின் தகுதியை மெச்சுவதுடன் எப்போதும் பிறருக்கு வெற்றிபெற உதவி செய்யத் தயாராக இருப்பார்.

**நேர்மையும் கீழ்ப்படிதலும் உள்ளவர்**

அவர் ஒழுக்கத்தைப் பேணி எப்போதும் நேர்மையாக இருப்பார்.



அம்மையார்
ஐந்தாவது வயதில்



ஸ்ரீ அவ்ரோ பிண்டோ அவர்கள்
பதினோராவது வயதில்

# விளையாட்டின் சட்ட விதிகள்

சட்டத்தைப் பேணு.

உன் தோழனுடன் விசுவாசமாக நடந்து கொள்.

உன் சுபாவத்தைப் பேணு.

உன்னை பொருத்தமாக வைத்துக் கொள்.

தோல்வியின் போது தைரியமாக மனதை வைத்துக் கொள்.

வெற்றியில் பெருமை கொள்.

ஆத்மாவை நல்ல நிலையிலும் மனதைச் சுத்தமாகவும் உடம்பை ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்.

எப்போதும் நியாயமாக செயற்படு.

"விளையாட்டுப் பற்றிய சட்ட திட்டங்கள்" ஜக்சன் ஆர். பார்மன் என்பவரின் "உடற்கல்விக்கான அறிமுகம்" என்ற நூலில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாகும். அந் நூலிலுள்ள "சிறந்த வீரர் ஒருவர்" என்ற தலைப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.

ஒரு சிறந்த விளையாட்டு வீரன்

**உபசரிப்பவராக இருப்பார்.**

விளையாட்டு மைதானத்தில் பிழைகளைக் கண்டு கேலி செய்யமாட்டார். எதிர்த்து விளையாடுபவர்களின் தோல்வியைக் கண்டு மகிழ்ச்சியடையமாட்டார். அவர்களை எதிரிகளாகவல்லாமல் அதிதிகளாக உபசரிப்பார்.

பாடசாலையில் அதிகாரிகளுடனும் சக மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் மரியாதையாக இருப்பார்.

வாழ்க்கையில் பிறரை மதித்துத் தன்னால் எவ்வாறு எவ்வாறு உபசரிக்கப்பட வேண்டுமோ அவ்வாறு பிறரை உபசரிப்பார்.

**பணிவுள்ளவராக இருப்பார்**

விளையாட்டு மைதானத்தில் தனிப்பட்ட கௌரவத்துக்கல்லாது குழுவின்நலனுக்காக வேலை செய்வார். குழுவுக்காக தனது சொந்த கௌரவத்தையும் தியாகம் செய்வார். அவர் ஒரு வசீகரமான வெற்றியாளர்.

பாடசாலையில் தனது வெற்றியில் அகந்தை கொள்பவராகவோ தனது வகுப்புப் பிள்ளைகளை விட தன்னை மேலானவராகக் கருதவோ மாட்டார்.

வாழ்க்கையில் தான் சாதிக்கப் போவதையிட்டு பெருமை பாராட்டுபவராகவே தான் சாதித்ததையிட்டு தற்பெருமை கொள்பவராகவோ இருக்கமாட்டார்.

**தாராள மனப்பான்மையுடையவர்**

விளையாட்டு மைதானத்தில் விளையாடுபவரின் சிறந்த விளையாட்டை மெச்சுவார்.

பாடசாலையில் பிறரின் நற்குணத்தைப் புகழ்வார். வாழ்க்கையில் வீழ்ச்சியுற்ற மனிதனைத் தூற்றாது அவருக்கு ஊக்கமளிப்பார்.

நேர்மையாகவும் தெளிவாகவும் தனது கருத்தைக் கூறுவதற்கு அஞ்சமாட்டார்.

### வெற்றி தோல்வியைச் சமமாக எடுக்கும் பண்பு

விளையாட்டு மைதானத்தில் அவர் கஷ்டப்பட்டு விளையாடுவார். ஏற்கனவே தோல்வியுற்ற போதிலும் அவர் போராடுவார். தனக்குப் பாதகமான தீர்மானங்களை கூட ஏற்றுக்கொள்வார். அவர் ஒரு நல்ல தோல்வியாளர்.

பாடசாலையில் அவர் அவருடைய வேலையைச் செய்வார். சில தோல்வியை எதிர்நோக்கிய போதிலும் வேலையைச் செய்துகொண்டே இருப்பார். அவரிடம் நேராகச் சிந்திக்கும் சக்தியும் நேராகச் செயல்படும் தைரியமும் இருக்கும்.

### கீழ்ப்படிதல் உள்ளவர்

விளையாட்டு மைதானத்தில் அவர் விளையாட்டின் சட்டதிட்டங்களை அனுசரித்து நடப்பார்.

பாடசாலையில் எல்லா விதிகளையும் அனுசரித்து நடப்பார்.

வாழ்க்கையில் இணக்கத்தை ஏற்படுத்த உதவும் விதிகளை மதிப்பார்.

### நேர்மையாக இருப்பார்

விளையாட்டு மைதானத்தில் கடினமாக ஆனால் நட்பாக போட்டியிடுவார். காயப்பட்ட எதிர் தரப்பாளருக்கு உதவி செய்வார்.

பாடசாலையில் தனது நேரத்தையோ அல்லது ஆசிரியருடைய நேரத்தையோ வீணாக்க மாட்டார். அவர் எப்போதும் நேர்மையுள்ளவர்.

வாழ்க்கையில் ஒரு வினாவின் இருபக்கங்களையும் பக்க சார்பின்றிக் காண்பார்.



அம்மையார்
1950



ஸ்ரீ அவ்ரோ பிண்டோ அவர்கள்
1950



4-CM 002643

## ஆச்சிரமப் பிள்ளைகளுக்கு

இயற்கையில் ஓர் ஏறுசிறைப் பரிணாம வளர்ச்சியுள்ளது. அது கல்லிலிருந்து செடிக்கும் செடியிலிருந்து மிருகத்துக்கும் மிருகத்திலிருந்து மனிதனுக்கும் செல்கின்றது. மனிதன் ஒரு நிறை பரிணாம வளர்ச்சியின் உச்சத்தில் கடைசிப்படியில் இருப்பதால் அவன் தன்னை இந்த ஏறுநிலையின் கடைசிக் கட்டத்தில் இருப்பதாகக் கருதி அவனை விட ஆமலான ஒன்றும் இம்மண்ணில் இல்லை என்று நம்புகிறான். இவ்விடயத்தைப் பொறுத்தவரை அவன் தவறு இழைக்கின்றான். அவனுடைய பௌதிக இயல்பைப் பொறுத்தவரை ஏறத்தாழ அவன் இன்னம் முழுமையான மிருகமே. அவன் சிந்தித்துக் கதைக்கும் மிருகம். அவன் உடல் சம்பந்தமான பழக்கவழக்கங்களையும், இயல்புகளையும் பொறுத்தவரை அவன் இன்னும் ஒரு மிருகம் தான். இயற்கையை அப்படியான ஒரு பூரணமில்லாத பிரதிபலனைக் கொண்டு திருப்தியடையச் செய்யமுடியாது என்பதில் சந்தேகமில்லை. இயற்கை உரு ஜந்தை வெளிக்கொணர முயற்சிக்கின்றது. அது மிருகத்துக்கு மனிதன் ஏவ்வாறு இருப்பானோ அவ்வாறு மனிதனுக்கு மிருகம் இருக்கும்.

ஸ்ரீ அவ்ரோபிண்டோ மனிதனுக்கு இந்த உண்மையைப் போதிக்கவே உலகில் தோன்றினார். மனிதன் ஒரு மன உணர்வில் வாழும் ஒரு மாறும் ஜந்தென்றும் ஆனால் ஒரு உண்மை உணர்வு எனும் ஒரு புதிய உணர்வைப் பெற்றுக் கொள்ளக் கூடியவன் என்னும் ஒரு முழுமையான, இணக்கமான, சிறப்பான, அழகான, மகிழ்ச்சிகரமான முழு உணர்வுடைய வாழ்க்கையை வாழக்கூடிய திறமையுள்ளவன் என்று அவர்களுக்குக் அவ்ரோபிண்டோ கூறினார். இந்த உணர்வைத் தன்னில் ஏற்படுத்திக் கொள்ளவும். தம்மைச் சூழவுள்ளவர்கள் இதை உணர்ந்து கொள்வதற்கு உதவி செய்ய தனது முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தார்.

நீங்கள் ஆச்சிரமத்தில் மிக இளமைப் பருவத்தில் வந்து சேர்வதில் பாரிய பாக்கியம் பெற்றவர்களாக இருக்கிறீர்கள். அதாவது இன்றும் உருவாக்கத்தக்கதான நிலையில் இந்தப் புதிய இலட்சியத்தின் படி வார்க்கத்தக்கதான இந்தப் புதிய இனத்தின் பிரதிநிதியாக ஆக்கிவிட்டார்கள். சூழல் ஈடுபாடு படிப்பித்தல் ஆகியவற்றைப் பொறுத்தவரையிலும் உங்களில் இந்த உணர்வைத் தட்டியெழுப்பி அதன் சட்டத்துக்கு ஏற்றவாறு வளர்த்தலைப் பொறுத்தவரையில் மிக வசதியான நிலையில் இருக்கிறீர்கள்.

இப்போது எல்லாம் உங்கள் விருப்பத்திலும் உண்மையிலும் தங்கியிருக்கின்றன. சாதாரண மனித வர்க்கத்துக்கு உரியவர்களல்லாமல் பரிணாம வளர்ச்சியில் வழிவந்த மிருகங்களெல்லாம் ஸ்ரீ அவ்ரோபிண்டோவின் இலட்சியத்தை உணர்ந்து புதிய இனத்தவர்களாக வேண்டும் என்று ஒரு புதிய உலகத்தில் ஒரு புதிய உயர்தரமான

வாழ்க்கையை வாழ நீங்கள் விரும்பினால் உங்கள் நோக்கத்தை அடைவதற்குத் தேவையான சகல உதவிகளையும் நீங்கள் இங்கே பெற்றுக் கொள்வீர்கள். ஆச்சிரமத்தில் தங்கி நின்று பூரணமான இலாபத்தைப் பெற்று இறுதியில் உலகத்துக்கே வாழும் உதாரணங்களாக திகழ்வீர்கள்.

1951 ஜூலை 24

## மாணவர்களின் பிரார்த்தனை

நாங்கள் ஆக முயற்சிக்கும் வீரப் போராளிகளாக எங்களை ஆக்குவாயாக. எதிர்காலத்தில் பெரிய போரில் வெற்றிகரமாகப் போராட எங்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்குவாயாக.

1952 சனவரி 06

## ஸ்ரீ அவ்ரோபிண்டோ சர்வதேசக் கல்வி நிலையம்

ஸ்ரீ அவ்ரோபிண்டோ எங்கள் மத்தியில் இருக்கிறார். அவருடைய ஆக்க நுண்ணறிவின் சக்தியைக் கொண்டு சர்வகலாசாலை நிலையத்தை உருவாக்குவதற்காகத் தலைமை தாங்குகிறார். இந்த மானசீக ஒளியைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்கால மனித வர்க்கத்தை தயார் செய்வதற்கு சிறந்த வழிகளில் ஒன்றாக இந்தப் பல்கலைக்கழகத்தைக் கருதுகிறார்.

இன்று அவருடைய பெயரால் சிறந்த இலட்சியங்களில் ஒன்றை உணர்த்தும் நோக்குடன் இந்த மகாநாட்டுக் கூட்டத்தை ஆரம்பித்து வைக்கின்றேன்.

1951 ஏப்பிறல் 24

"ஸ்ரீ அவ்ரோபிண்டோ கல்வி நிலையத்தை ஆரம்பித்து வைக்கும் முகமாக பாண்டிச்சேரியில் நடைபெற்ற ஸ்ரீ அவ்ரோபிண்டோ ஞாபகார்த்த உரையிலிருந்து ..........."

**இந்த நூல் எல்லாப் பிள்ளைகளின் கரங்களுக்கும் போய்ச் சேரட்டும்.**

ஆங்கிலப் புத்தகத்தில்
முதலாவது பதிப்பு :- 1953
மீள்பதிப்பு
1967, 1969, 1970, 1971, 1977, 1978(2), 1979, 1981
ஆறாவது பதிப்பு :- 1982
மீள்பதிப்பு :- 1987, 1988, 1991

ஸ்ரீ அவ்ரோபிண்டோ ஆச்சிரமம் – 1982
ஸ்ரீ அவ்ரோபிண்டோ ஆச்சிரமம் வெளியீட்டுப் பகுதியால் பிரசுரிக்கப்பட்டது. பாண்டிச்சேரி
ஸ்ரீ அவ்ரோபிண்டோ அச்சியந்திரச் சாலையில் பிரசுரிக்கப்பட்டது.
இந்தியாவின் வெளியீடு.

## இலட்சியப் பிள்ளை

பாடசாலையில் இருக்கும் போது படிக்க விரும்புகிறார்.
விளையாட்டு மைதானத்தில் இருக்கும்போது விளையாட விரும்புகிறார்.
சாப்பாட்டு நேரத்தில் சாப்பிட விரும்புகிறார்.
படுக்கை நேரத்தில் உறங்க விரும்புகிறார்.
அவரைச் சூழவுள்ளவர்களை எப்பொழுதும் நேசிக்கிறார்.
தெய்வீகக் கருணையில் நம்பிக்கை வைப்பதுடன் தெய்வீகத்துக்கு ஆழ்ந்த மரியாதை உள்ளவராக இருக்கிறார்.

## வெற்றிக்கு அழைப்பு

எனது தைரியமான சிறு போர் வீரர்களே நான் உங்களை வாழ்த்துகிறேன். முன் ஏற்பாட்டின் படி பலர் சந்திக்கும் இடத்துக்கும் உங்களை வெற்றியுடன் நான் அழைக்கிறேன்.

# இலட்சியப் பெற்றோர்

**முழுமையான புதிய ஆக்கம்**

ஒரு புதிய இனத்தின் எதிர்பாராத விதமான உதயத்தை மீண்டும் இயற்கை உணர்கின்றது. இந்த உணர்வுக்கு/துடிப்பிற்கு நாம் விடை காணுவதோடு அதற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

(தாய் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது)
முற்றிலும் புதிதான ஒன்று

பகுதி 1

கேள்வி : இனிய தாயே தமக்குக் கிடைக்கப் போகும் சிசுவின் ஆத்மாவை தமது விருப்பிற்கு ஏற்ப கேட்டுப் பெற்றுக் கொள்ள எந்த ஒரு தகப்பனுக்கோ, தாய்க்கோ முடியுமா ?

விடை : கேட்டுப் பெற்றுக் கொள்வதா? அப்படிப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு மாய/இரகசியமான அறிவு தேவை. ஆனால் அவ்வாறான அறிவு பொதுவாக அவர்களிடம் காணப்படுவதில்லை. எவ்வாறு இருப்பினும் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்ட விலங்குகளைப் போலல்லாது தமக்குள் இருக்கும் உள்ளுணர்வினாலும், அவாவினாலும் சில சமயங்களில் எவ்விதத் தேவையுமற்ற நிலையில் கூட புதிய ஓர் உயிரை உருவாக்குவதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். மேலும் அவர்கள் தம்மை ஒரு வணக்க நிலைக்கு உட்படுத்துவதோடு, தாம் பெற்றெடுக்கப் போகும் சிசு தாம் விரும்பும் ஆத்மாவை உடைய ஓர் உயிராக உருவெடுக்க வேண்டும் என பேரவாக் கொள்கின்றனர். எனினும் என்னைப் பொறுத்தவரையில் இது சாத்தியமற்ற தொன்றாகும். என்றாலும் சிலர் விசேட சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தியுள்ளனர். இதற்காக விசேட தியானங்களிலும், தம்மை ஒருமுகப்படுத்துவதிலும் ஈடுபடுகின்றனர். இதன் விளைவாக ஒரு விதிவிலக்கான குழந்தை ஒன்றை எதிர்பார்க்கின்றனர்.

பல பண்டைய நாடுகளிலும், இன்றைய நவீன நாடுகளிலும், பிரசவத்திற்குத் தயாராகும் பெண் ஒருத்தி ஓர் உன்னத/உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளாள். அழகான, அமைதியான, சிறந்த வசதிகளையுடைய ஒரு சூழலை அவளுக்கு அமைத்துக் கொடுப்பதன் மூலம், உருவாகும் குழந்தைக்கு ஒரு சிறந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்க முற்படுகின்றனர். இவ்வாறான செயற்திட்டங்களை எய்த மனிதன் இன்று முன்னேறியுள்ளான் எனும் கருத்து விதிவிலக்கான தொன்றன்று. எனினும் இவ்விடயத்தில் ஒரு சிலரே தமது கண்ணோட்டத்தைச் செலுத்துகின்றனர். எது எவ்வாறு இருப்பினும் ஏன், எதற்கு என்று கூட இல்லாமல் மக்கள் பிள்ளைகளை பெற்றெடுத்துள்ளனர். இதுவே நான் சொல்ல வந்த விடயமாகும்.

## உண்மையான தாய்மை

தாய் ஒரு பெண்ணின் மிக முக்கியமான ஒரு பண்பாகக் கருதப்படுகின்றது. தாய்மை எனும் பதத்தை எவ்வாறு புரிந்து கொள்கின்றோம் என்பதில் தான் தங்கியுள்ளது. ஒரு பிள்ளையை இவ்வுலகிற்கு ஈன்றெடுப்பது என்பது முயல்கள் தமது இளையவற்றைத் தூண்டற்பேற்றினாலும், மடமையினாலும், இயந்திரம் போன்று ஈனுவது போன்று செயலல்ல. இவ்வாறான ஒரு செய்கையை தாய்மை எனக் கூற முடியாது. உண்மையான தாய்மை, ஓர் உணர்வுள்ள உயிரினை உருவாக்குவதிலும் அதன் ஆத்மாவிற்கு சிறந்த வடிவமைப்பைக் கொடுப்பதோடு ஒரு புதிய உடலை உருவாக்குவதிலும் தங்கியுள்ளது. ஒரு பெண்ணின் உண்மையான கோட்பாடு புனிதத்துவமாகும். எனினும் இதை நாம் அடிக்கடி மறந்து விடுகின்றோம்.

ஒரு பிள்ளையைச் சுமந்து அதற்கு உடலமைப்பைக் கொடுப்பது, தன்னிலை மறந்து, உணர்வற்ற நிலையில் நடப்பது, போதுமானதன்று, உண்மையில் இவ்வேலை ஆரம்பிப்பது சிந்தனாசக்தியினதும், மன உறுதியினதும் பிரதிபலிப்பினாலேயாகும். இதனால் உருவாகப்போகும் குழந்தை ஒரு நற்குணமுள்ள வெளிப்படையான தகுதியுள்ள ஒன்றாக அமையப் போவதில் சந்தேகமில்லை.

ஒரு முன்மாதிரியான குழந்தையை உருவாக்குவதில் எமக்கு எத்தகுதியும் இல்லை என்று கூற வேண்டாம். இதற்காக ஓர் உதாரணத்தை உங்களுக்கும் எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். இருபெண் பிள்ளைகள் அவர்கள் இரட்டையர்கள், அழகானவர்கள். ஆனால் அவ்விருவரினதும் தோற்றம் அவர்களினது பெற்றோரை விட வேறுபட்டிருப்பதைக் கண்டு வியந்தேன். இந்நிலையில் ஒரு பிரசித்தம் பெற்ற ஓவியம் ஒன்று என் நினைவுக்கு வந்தது. அவ்வோவியத்தை ஆங்கில ஓவியரான றெனோல்ட்ஸ் வரைந்துள்ளார். பின்பு அவ்விரட்டையர்களின் தாயாரிடம் "உங்கள் குழந்தைகள் இவ்வோவியத்தில் உள்ளவர்களைப் போலல்லவா உள்ளனர்" என வினவினேன். அதற்கு அத்தாய் அளித்த பதில் இதோ, "இவ்விருவரினதும் பிரவசத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நான் எனது அறையில் கட்டிலிற்கு மேலால் இந்த உருவத்தைத் தொங்க விட்டிருந்தேன். நித்திரைக்குச் செல்லும் முன்னும், துயிலெழுந்தவுடனும் நான் முதலாவது பார்ப்பது இந்த உருவத்தினையே. என்னையறியாமலேயே என் உள்ளுணர்வு எனக்குக் கிடைகக்கப் போகும் குழந்தை இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்று ஒலித்துக் கொண்டிருந்தது. பாருங்கள் எனது எண்ணம் இன்று வெற்றி பெற்று விட்டது" உண்மையிலேயே அத்தாய் தனது வெற்றியில் பெருமையடைவதில் வியப்பில்லை. அது மாத்திரமல்ல. இவ்வுதாரணம் எல்லாப் பெண்களுக்கும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டான, பிரயோசனமான ஒன்றாகும்.

**வியக்கத்தகு வேலை**

முயற்சியின் காரணமாக தாய்மை உன்னதமாகின்றது. புனிதத்துவம் அடைகின்றது. இதன் மூலம் ஆத்மாவை உருவாக்கும் ஒரு சிறந்த பணிக்கு தம்மை இட்டுச் செல்கின்றனர். மேலும் பெண்மை சாதாரண தாண்டற்பேறுள்ள விலங்கிலிருந்து உயர்வு பெறுவதோடு, மனிதத்துவத்திற்கும் அதன் சக்திக்கும் வழிகோலுகின்றது.

இந்த முயற்சியில் தான் எமது உண்மையான கடமை தங்கியுள்ளது. இக் கடமைக்கு எந்நேரமும் நாம் மிக உயர்ந்த அந்தஸ்தை/ நிலையைக் கொடுப்போமாயின் இன்றைய உலகக் கூர்ப்பிற்கு அது ஒரு சிறந்த மூலதனமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

**உதயத்தின் வருகை**

தம்முடையதும், தமது குடும்பத்தினரது மனம் தற்போதைய எல்லையை விட விரிவடைய வேண்டும் என்று உணர்வோர், சிறிய சுயநல எண்ணங்களுக்கும், உள்ளார்ந்த சம்பிரதாயங்களுக்கும் இடங்கொடுக்கமாட்டார்கள். அவர்கள் தாம் என்றோ, தமது குடும்பம் என்றோ, தமது நாடு என்றோ தம்மை இனங்காணமாட்டார்கள். ஆனால் சர்வவல்லவனான இறைவனுக்கே தாம் உரித்தாளிகள் என்று அவர்கள் திடமாக நம்புவார்கள். உண்மையிலே இதனால் தான் அவர்கள் மனித இனத்தின் உதயத்தின் வருகைக்காக உழைப்பதற்கு எழுச்சி பெறுகின்றனர்.

எனவே இந்த முக்கியமான, முடிவற்ற, நானாவிதமான வேலையில், ஒரு பெண்ணின் பங்கு என்னவாக இருக்க முடியும்? எந்தவொரு பெரிய நிகழ்வின் போதோ, வேலையின் போதோ வழமையில் தொன்றுதொட்டே பெண்கள் ஒரு மூலைக்குப் பின்னோக்கித் தள்ளப்பட்டு வந்துள்ளனர். பெண்களை உன்னுடைய வேலையல்ல. உதவாக்கரை, பலவீனமானவள், துர்ப்பலமானவள், பயனற்றவள் என்றெல்லாம் கூறுவதோடல்லாது பெண் என்பவள் தாழ்மையானவள். பணிவானவள், சிறுபிள்ளை போன்றவள், சோம்பேறி போன்ற அடைமொழிகளாலும் அழைக்கப்படுகின்றாள். இவ்வாறான வரைவிலக்கணங்கள் இன்று அநேக உலக நாடுகளில் கூட ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பது மிகவும் வருந்தத்தகு

விடயமாகும். எனினும் இவ்வாறான எண்ணக்கருக்கள் பிழையானவை என நான் துணிந்து கூறுவேன். எதிர்கால உலகில் இவ்வாறான பிரிவினைகளுக்கு எவ்வித இடமும் இல்லாமல் இருக்கும். இருபாலாருக்குமிடையிலான உண்மையான உறவு சம அந்தஸ்து உடையதாகவும், பரஸ்பர உதவியுடையதாகவும், நெருங்கிய ஒற்றுமையுடையதாகவும் இருக்கும்.

**உயர் சாத்தியக் கூறு**

நாம் இங்கு மீண்டும் எமது ஆரம்ப கருத்திற்கு வருவோம். அதாவது உண்மையான தாய்மையின் கடமை என்பது ஒரு புதிய/ வித்தியாசமான குழந்தைக்கு உருக்கொடுப்பதாகும். இது ஆன்மீக உந்தலின் அவசியத்தால் உருவாகப் போகும் சிசுவையே குறிக்கும். இவ்வருங்காரியத்தை ஒரு பெண்ணைத் தவிர யாரால்தான் செய்ய முடியும் ?

நாம் அறிந்துள்ள பிரசித்தி பெற்ற மனிதர்களைப் போன்றோ அல்லது அதை விட மேலானவர்களாகவோ எங்கள் பிள்ளைகள் உருவாக வேண்டும் என்ற எண்ணம் மாத்திரம் எம்மிடமிருந்தால் அதுபோதுமான தொன்றன்று. நல்ல எண்ணத்தினாலும் தொடர்ந்த அவாவினாலும் முயற்சிக்கும் போது ஓர் உயர்சாத்தியமான தனிமனித அளவுகோள்களில் இருந்தும் சாயலில் இருந்தும் கூடிய நிலையை அடைந்த ஒரு தெய்வீகத் தன்மையுள்ள உயர் மனிதனை ஈன்றெடுப்பது சாத்தியமாக இருத்தல் வேண்டும்.

**எதிர்கால மனிதன்**

ஓர் எதிர்கால மனிதனை அல்லது உயர் மனிதனை உருவாக்கும் கருத்தரிப்பில் நாம் எமது கவனத்தை முதலில் திருப்புவதோடு அதில் மிகவும் கவனமாகவும் இருக்க வேண்டும். அவ்வெதிர்கால மனிதன் தற்போதைய மனிதனின் சாயலையோ, நடைமுறையையோ ஒத்ததாக அமையாமல் தவிர்க்கும் முகமாக நாம் வாழ்வின் கூர்ப்பினை படிப்பது அவசியமாகவுள்ளது.

**புதிய யுகம்**

இந்த தனி நபர்களுள், பெண்களே முதலில் இந்த மாற்றத்தை உணரக்கூடியவர்களாக இருப்பர். ஏனெனில் முதலாவது புதிய மனித வர்க்கத்தை / இனத்தை உலகிற்கு அளிப்பது அவளுடைய விசேட கடமையாகவுள்ளது.

**அதி உயர் சன்மானம் / வெகுமதி**

எனவே இப்புதிய தனிநபர் தற்புகழ்ச்சி உடையனவாகவோ, எந்தச் சட்டத்தினாலோ சம்பிரதாயத்தினாலோ வழிநடாத்திச் செல்லப்படக்கூடியனவாக இருக்க மாட்டான். அவன் எல்லா விதமான சுயநலப் போக்கையும் விட்டொழிப்பான். அவனது சட்டம் ஆசைகளைத் தழுவியதாக இருக்காது. இவ்வுலகிலோ அல்லது அதைவிட மேலான தொன்றிலோ சுயநலம் கருதி நடப்பது அவர்களுக்குச் சாத்தியமற்றதொன்றாக எண்ணிக்கூடப் பார்க்க முடியாத ஒன்றாக இருக்கும். ஒவ்வொரு செயலும் முழுமையாகவும், எளிமையாகவும், சந்தோசமாகவும், பணிவாகவும் இறைச் சட்டத்தின் தூண்டலினாலும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இது எவ்வித சன்மானமோ நலனோ கருதி நடைபெற மாட்டாது. அவர்கள் தமது மனச்சாட்சிக்கேற்ப தம்மை இனங்காண்டதோடு, தமக்குள் இருக்கும் தெய்வீகக் கொள்கையின் காரணமாக இவ்வேலையை மிகவும் சந்தோசமாகச் செய்வர். இதுவே அவர்களுக்குக் கிடைக்கும் அதி உயர் சன்மானமாகும்.

## பகுதி 11

### பிள்ளைகளுக்குக் கற்பித்தல் தான் கற்றல்

ஒரு மனிதனின் கல்வி பிறப்பிலேயே ஆரம்பிக்கப்படுவதோடு, வாழ்நாள் பூராகவும் தொடரப்படுதல் வேண்டும்.

உண்மையிலேயே, எமக்கு கல்வியின் அதி உயர் பலனை அடைய வேண்டுமாயின் கல்வி என்பது பிறப்பிற்கு முன்பிருந்தே ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.

பெற்றோர்கள் அவர்களின் பிள்ளைகள் கல்வியுடையவர்களாக வேண்டும் என்பதை அறிந்துள்ளனர். அதற்காக அவர்கள் முடியுமான எல்லாவற்றையும் செய்கின்றனர். ஆனால் ஒரு சிலரே இவ்விடயத்தில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து எந்த விடயங்களை முதலில் செய்ய வேண்டும் என்பதை அறிந்து அவ்வொழுங்கில் பிள்ளைகளுக்கு கல்வியூட்ட முனைகின்றனர். இதன் மூலம் அவர்கள் தம்மைத் தாமே அறிந்து கொள்வதோடு, தமக்கே எஜமானாகி ஒரு முன்மாதிரியான வாழ்க்கை வாழ்வதால் எச்சந்தர்ப்பத்திலும் கெட்ட/ தவறான உதாரணங்களை தமது பிள்ளைகளுக்கு முன் வைக்க மாட்டார்கள். ஏனெனில் முன்மாதிரியின் மூலமே ஒரு பிள்ளைக்குச் சிறந்த கல்வியை வழங்க முடியும். தாம் கற்றுக் கொடுப்பதை தாம் நடைமுறைப்படுத்தாவிடின் தமது சொல்லுக்கோ, அறிவுரைக்கோ எவ் வித மதிப்பும் கிடைக்காது. பணிவு, நேர்மை, வெளிப்படையாகப் பேசுதல், துணிச்சல், சுயநலமற்ற தன்மை, சகிப்புத் தன்மை, அமைதி, சமாதானம், தன்னடக்கம் என்பவற்றை வெறும் அறிவுரைகளினால் மாத்திரம் ஒரு பிள்ளைக்குப் புகுத்த முடியாது. உதாரணம்/ வழிகாட்டல் மூலமே இவற்றை நடைமுறைப்படுத்தலாம். இவ்வாறு பெற்றோர் பிரதி பலிப்பதில் எவ்வித வியப்புமில்லை. எமக்குத் தெரியும். இயற்கையாகவே ஒரு பிள்ளை தனது பெற்றோரை கௌரவிப்பதோடு கடவுளின் ஸ்தானத்தில் கூட வைத்து விடுகின்றனர். எல்லா விடயங்களிலும் அவர்களை அடியொட்டியே நடக்க பிள்ளைகள் எத்தனிப்பர்.

### எப்பொழுதும் உண்மை பேசுவதே சிறந்தது

பெற்றோர்களின் குறைபாடுகள், உள்ளுணர்வுகள், சுயகட்டுப்பாடின்மை போன்ற பாரதூரமான விளைவுகள் தமது பிள்ளைகளையும் பாதிக்கும் என்பதை ஒரு சில பெற்றோரே உணர்ந்துள்ளனர். உங்கள் பிள்ளைகளால் நீங்கள் மதிக்கப்பட வேண்டுமானால், நீங்கள் உங்கள் சுய மரியாதையைப் பேணிக் கொள்வதோடு, எந்நேரமும் அவர்களால் மரியாதைப்படுத்தப்படக்கூடியவர்களாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். எப்பொழுதும் அதிகாரம் செலுத்துபவர்களாகவோ, பொறுமை இழந்தவர்களாகவோ, கோப முடையவர்களாகவோ இருப்பதைத் தவிர்த்துக் கொள்ளவும். உங்கள் பிள்ளை உங்களிடம் ஒரு கேள்வி கேட்டால் நீங்கள் கூறப்போவதை அவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள் என்று கருதி அதற்குப் பிழையான அர்த்தமற்ற பதிலைக் கூற வேண்டாம். எனினும் நீங்கள் சற்று முயற்சிப்பின் நீங்கள் சொல்வதை அவர்களுக்குப் புரிய வைக்க முடியும்.

எப்பொழுதும் உண்மை பேசக் கூடாது என்ற முதுமொழியை சில ஆதாரமாகக் காட்டினாலும், எப்பொழுதும் உண்மை பேசுவதே சிறந்தது என்று என்னால் உறுதியாகக் கூற முடியும். ஆனால் அதைச் சொல்லும் போது கேட்பவரின் உள்ளத்தில் அதைத் தெளிவாகப் பதிய வைத்தல் வேண்டும். சிறார்கள்.(12 – 14) வயத்திற்குட்பட்டவர்கள் நற்கருத்துக்களுக்கும், சிந்தனைகளுக்கும் தம் உள்ளங்களைத் திருப்பமாட்டார்கள். எனினும் உருவப் படங்ள், அடையாளங்கள், நீதிக் கதைகள் மூலம் அவர்களைப் பயிற்றுவிக்க முடியும். ஒரு குறித்த

வயதெல்லையை அடையும் வரை எவ்வித விளக்கக் குறிப்புக்களும் அவர்களுக்குப் பயனற்றதாகவே இருக்கும். பதிலாக கதைகள், சம்பவங்கள், நிகழ்வுகள் என்பவையே சிறந்த பயிற்றுவிப்புக் கருவிகளாகும்.

**உடற்கல்வி**

இதுவும் பிறப்புடன் ஆரம்பித்து வாழ்நாள் பூராகவும் தொடர்ந்து நடைபெற வேண்டும். இது மிக வேகமாக ஆரம்பிக்கப்படுவதற்கோ, தாமதித்து ஆரம்பிக்கப்படுவதற்கோ உரியதொன்றல்ல. உடற்கல்வி மூன்று பிரதான கூறுகளைக் கொண்டுள்ளது.

I. உடல்கட்டுப்பாடு, ஒழுக்கம், அதன் செயற்பாடு

II. ஒருங்கிணைந்த முறையான உடல் உறுப்புக்களின் வளர்ச்சியும் அதன் செயற்பாடும்

III. தவறுகளையும், குறைபாடுகளையும் திருத்தல்.

ஒரு பிள்ளை தனது கை, கால்களின் இயக்கத்தை ஆரம்பித்ததில் இருந்து தினந்தோறும் உடற்பயிற்சி ஒரு குறிப்பிட்ட நேரம், உடல் உறுப்புக்களின் சரியான ஒழுங்கிற்கும், வளர்ச்சிக்குமாக ஒதுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் 20 அல்லது 30 நிமிடங்கள் செய்யப்படும் உடற்பயிற்சியானது தசைகளை உறுதியாக்குவதற்கும், சரியான அங்கச் செயற்பாட்டிற்கும், ஒரு சமநிலை வளர்ச்சிக்கும் சிறந்த உறுதுணையாக இருக்கும். இதனால் நாம் நினைப்பதை விட விரைவாக எம்மை அணுகும் நோய்களில் இருந்தும் மூட்டுவாதம், வலி, முள்ளந்தண்டுப் பிடிப்பு என்பவற்றில் இருந்தும் எங்களைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

**நற்பழக்கம்**

ஒரு குழந்தை தனது ஆரம்ப நாட்களில் இருந்தே அல்லது அதன் வாழ்வின் ஆரம்ப மணித்தியாலயங்களில் இருந்தே உணவு, உறக்கம், மலசலம், கழித்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களில் திட்டமிடப்பட்ட பயிற்சிக்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். ஒரு குழந்தை ஆரம்பத்தில் இருந்தே நற்பழக்கங்களை நடைமுறைப்படுத்தப் பழகிக் கொள்ளுமாயின், அக் குழந்தை வாழ்வின் ஏனைய கட்டங்களில் எதிர்கொள்ளக் கூடிய பிரச்சினைகள் பொருத்தப்பாடின்மை என்பவற்றிற்காக தன்னை தயார்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அத்தோடு அக்குழந்தையைப் பராமரிப்போரின் வேலைப்பளு மிகவும் இலகுவாக இருக்கும்.

**உணவு**

ஒரு பிள்ளை தனது ஆசையில் இருந்து, தேவையைப் பிரித்தறியக் கூடிய விதத்தில் மிகவும் கவனமாகப் பயிற்றுவிக்கப்படுதல் வேண்டும். எளிமையான, சுகாதாரமான, போதுமான, சமிபாடடையக்கூடிய உணவை உட்கொள்வதற்கே அக்குழந்தை பயிற்றுவிக்கப்படுதல் வேண்டும். தவிர அவ்வுணவு வகைகள் எவ்வித தேவையற்ற சேர்வைகள் அற்றதாகவும் இருத்தல் வேண்டும். அக்குழந்தையின் அன்றாட உணவு வெறும் உணவாகவோ, பாரமானதாகவோ அமைதல் கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக, தமக்கு பசிவரும் போதே உணவு உட்கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துவதோடு, உணவு என்பது தனது

பேராசையைப் பூர்த்தி செய்து வயிற்றை நிரப்புவது அல்ல என்பதையும் உணர்த்துதல் வேண்டும். ஒரு பிள்ளை தான் ஏன் உணவு உட்கொள்ளுகின்றேம் என்பதைத் தெளிவாக அறிய வேண்டும். அதாவது உடல் ஆரோக்கியத்திற்காகவும், பலத்திற்காகவுமே தவிர சந்தோச மேலீட்டிற்கோ அல்லது தமது அவாவைப் பூர்த்தி செய்யவோ அல்ல என்பதை சிறுபராயத்தில் இருந்தே அறிந்து இருத்தல் வேண்டும்.

## சுத்தம்

சுத்தம், சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்கள் யாவும் சிறுவயதில் இருந்தே போதிக்கப்படுதல் வேண்டும். எனினும் சுத்த, நற்பழக்க வழக்க சட்டங்களைப் போதிக்கும் போது பிள்ளையின் மனதில் நமக்கு நோய் ஏற்படுமோ என்ற பயம் வராதிருத்தல் வேண்டும். ஏனெனில் பயமே கல்வியின் எதிரியாகும். மேலும் பயப்படும் விடயங்களே பிள்ளைகளை அதிகம் கவரக்கூடியதாக உள்ளன. எனவே நோய்க்கான பயம் அற்றுப் போகும் போது, பிள்ளை நாம் போதிப்பதை ஏற்றுக் கொள்ளவதோடு, அவற்றை நடைமுறைப்படுத்த முற்படுமே தவிர, அவற்றை மீற எத்தனிக்காது.

## உறக்கம்

எது எப்படியிருந்தாலும், எவ்வேலையைச் செய்தாலும் ஒரு குழந்தைக்குப் போது மானளவு உறக்கம் அவசியமாகின்றது. எத்தனை மணித்தியாலயங்கள் உறங்க வேண்டும் என்பது வயதிற்கு வயது வேறுபடும். தொட்டில் பிள்ளை அதிக நேரம் உறக்கத்திலேயே கழிக்குமே தவிர விழித்திருக்காது. பிள்ளை வளர வளர உறங்கும் நேர அளவும் குறைந்து கொண்டே செல்லும். ஆனால் கட்டிளம் பருவம் அடையும் வரை தூங்கும் நேரம் 8 மணித்தியாலயங்களை விடக் குறைதல் ஆரோக்கியமானதல்ல. தூங்குமிடம் சுத்தமாகவும், காற்றோட்டம், உள்ளதாகவும், அமைதியாகவும் இருத்தல் வேண்டும். எக்காரணம் கொண்டும் சிறு பிள்ளைகளை பின்னிரவு வரை விழித்திருக்க அனுமதிக்கக் கூடாது.

## ஏசுதல் / திட்டுதல்

காரணமின்றி குழந்தையை எப்பொழுதும் ஏச வேண்டாம். ஏசாமல் முடியாது என்ற நிலை ஏற்பட்டாலே தவிர ஏசுதல் கூடாது. தொடர்ந்து ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளாகும் பிள்ளை காலப் போக்கில் அதற்குப் பழக்கப்படுவதோடு, அதற்கு எந்தவித முக்கியத்துவமும் கொடுக்காது. தவிர நீங்கள் செய்யும் குற்றத்திற்காக ஒருநாளும் பிள்ளையைத் தண்டிக்காதீர் கள். பிள்ளைகள் மிகவும் கவனமாக எதையும் அவதானிக்கக் கூடியவர்கள். அவர்கள் உங்களுடைய குறைபாடுகளைக் கண்டறிய முற்படுவர். .

பிள்ளை பிழை செய்யும் போது அதை அதற்குப் பிழையென உணர வைக்க வேண்டும். அவர்களது தவறை ஏற்றுக் கொள்ளும்போது அன்புடனும், ஆதரவுடனும் அவர்களை அணுகி, அவர்களின் பிழைகளைச் சுட்டிக் காட்டி அவற்றை மீண்டும் செய்ய வேண்டாம் என எடுத்துக் கூறுங்கள். பிள்ளை தவறை தவறு என ஒத்துக் கொள்ளுமிடத்து பிள்ளையை மன்னியுங்கள். ஏச வேண்டாம்.

## எவ்வித பயத்திற்கும் இடங்கொடாதீர்

உங்கள் பிள்ளை உங்களைக் கண்டு அஞ்சி நடுங்குமளவிற்கு கடுமையாக நடந்து கொள்ளாதீர்கள். இது பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். தவிர ஏமாற்றத்திற்கும், பொய்யுரைப்பதற்கும் கூட வழிவகுக்கும்.

## குழந்தை அழகை விரும்பக் கற்றுக் கொடுங்கள்

நல்ல ஆரோக்கியம், உடற்பலம், உடற்சமநிலை என்பனவற்றைப் பற்றி குழந்தைகள் சிறுவயதில் இருந்தே கற்பிக்கப்படுதல் வேண்டும் என நான் ஏற்கனவே கூறியுள்ளேன். அத்தோடு அழகின் மகிமையைப் பற்றியும் அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். இளஞ் சிறார்கள், ஏனையோரைக் கவருவதற்கோ, மற்றவர்களைச் சந்தோசப்படுத்தவோ அழகை விரும்பக் கூடாது. அழகுக்காகவோ அழகை விரும்புதல் வேண்டும். ஏனெனில் அழகுதான் எம்மால், எமது வாழ்வில் உணரப்படக்கூடிய ஒரு சிறந்த விடயமாகும். அழகு ஒவ்வொரு மனிதனுக்கும் தனது ஒவ்வொரு வித்தியாசமான உடல் பாகங்களில் அமைதியைக் காண உதவுவதோடு அதன் செயற்பாட்டிற்கும் துணைபுரிகின்றது.

## மருத்துவம்

தவிர்க்க முடியாத அத்தியாவசிய நிலைமைகளைத் தவிர எக்காரணத்தைக் கொண்டும் மருந்து வகைகளை உபயோகிக்கக் கூடாது என்று நான் உறுதியாகக் கூறுவேன். அவ்வாறு எம்மால் இருக்க முடியாது என்று சொல்வதைக்கூட தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்

## பிள்ளைப் பராமரிப்பு

பிள்ளைகளை வேலைக்காரர்களோடு வைத்து விட்டுச் செல்வதே மனிதன் செய்யக் கூடிய மிகவும் கேவலமான செயலாகும். அது ஒரு தண்டனைக்குரிய விடயமுமாகும். இவ்விடயத்தில் மக்கள் கொடூரமான மனப்பாங்கைக் கொண்டுள்ளனர் என்றே கூற வேண்டும். கீழ்த் தரமான இச் செய்கை சுயமாகவோ எவ்விதத் தேவைப்பாடுமில்லாமல் பிள்ளையிடம் பாதிப்புகள் நுழைய பெற்றோரே வழிவகுக்கின்றனர்.

## முக்கியமான விடயம்

முக்கியமாக, மிகவும் முயற்சி செய்து பிள்ளைகளுக்கு அவர்கள் அவர்களை எவ்வாறு அறிந்துக் கொள்ள வேண்டும். எந்த இலக்கை நோக்கிச் செல்ல வேண்டும் என்பவற்றைக் கற்பித்தல் வேண்டும். தங்களைத் தாமே புரிந்து கொள்ளச் செய்வதோ, தாம் எவ்வாறு உருவாக வேண்டும் என்பதை அவர்களாகவே தீர்மானிப்பதற்கும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

கற்பதற்கான ஆவலை ஊட்டுவதே பெற்றோர் தம்பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டிய சிறந்த/விலை மதிப்பற்ற செல்வமாகும். இதனால் அவர்கள் எப்பொழுதும் எங்கும் கற்றுக் கொண்டே இருப்பார்கள்.

**தாய்**

# இலட்சிய ஆசிரியர்

தமது வாழ்க்கையில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும் சிறப்பானதொரு பிரயோசனத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அதனை வளர்த்தெடுத்துக் கொள்வதற்கும் வாழும் வாழ்க்கைக்கு உதவி செய்தல் கல்வியின் முக்கிய குறிக்கோளாகும்.

## உதாரண ஆசிரியர்

கல்வியின் பிரதான நோக்கம் உயர்தரமான சிறந்த குணங்களை சிறுவன் தன்னகத்தில் வளர்த்துக் கொள்வதே.

நவீன கல்விக் கொள்கை ஒரு சிறுவனின் மூளை வளர்ச்சியையும், சௌந்தரியத் தன்மைகளையும், மன எழுச்சிகளையும் வளர்த்து ஆத்மீக வழியில் சமூகத்தில் தமது உணர்ச்சிகளை தனது சக்திக்கு ஏற்ப இயற்கையான முறையில் வளர்த்துக் கொள்வதாகும்.

பழைய கல்விக் கொள்கையானது அறிவை மூளையில் சேகரித்து அதை மாற்றமடையாமல் திரும்பவும் மீட்டுப் பெறுவதாகும். இந்த முறை மாணவனின் உச்ச வேகத்தை கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கல்விக் கொள்கையின் உண்மையான நோக்கம் போதிப்பதில்லை. ஆசிரியர் ஒரு போதனையாளரோ காரியகர்த்தாவோ அல்ல. அவர் ஒரு வழிகாட்டியே. அவர் எண்ணங்களை வெளிப்படுத்துபவர். அவர் வேலைத்திட்டங்களை உருவாக்குபவர் அல்லர். அவர் அறிவைப் பெறுவதற்கான வழியை தானவே பெற்றுக் கொள்ள வழிகாட்டுபவர். அவர் அறிவு எங்கே இருப்பது என்பதைக் காட்டி அதை வெளிக்கொண்டு வர உதவி செய்பவர்.

இரண்டாவது கல்விக் கொள்கை அவர்களின் மூளை வளர்ச்சிக்கு உதவி செய்தல். சிறுவர்களை தண்டித்து ஆசிரியர்களினதோ, பெற்றோர்களினதோ ஆசைகளுக்கு ஏற்ப உருவாக்குவது காட்டுமிராண்டித்தனமானதும் மூடநம்பிக்கையுமாகும். மாணவன் தனது, இயற்கைச் சுபாவத்துக்கு ஏற்ப தூண்டப்பட வேண்டும். தனது மகனை/மகளை முன்னேற்பாடு செய்துள்ள தொழிலுக்கு ஏற்ற தன்மைகளையும், திறமைகளையும் எண்ணங்களையும் பெறுமதிகளையும் வளர்ப்பது பெற்றோர் செய்யும் மாபெரும் தவறாகும்.

அவனது அவளது இயற்கைத் தன்மைகளை அழிப்பது பெரிய தவறாகும். இது சுயநலமும் கொடுங்கோன்மையுமாகும். அத்தோடு தேசத்துக்குச் செய்யும் களங்கமாகும். இது மனிதன் அடையப் போகும் நம்மைகளை இழக்கச் செய்வதோடு அவனை/ அவளை சீரற்ற செயற்கையான இரண்டாந்தரமான நிலைக்கு உள்ளாக்குவதாகும்.

ஒவ்வொரு மனிதனும் தனக்கு இறைவன் கொடுத்துள்ள தெய்வீகத் தன்மையை ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ சக்தி பெறுகிறான். கற்பதன் நோக்கம் இத்தன்மையை ஏற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ சக்தி பெறுகிறான். கற்பதன் இறுதி நோக்கம் இத் தன்மைகளை வளர்த்துப் பயன்படுத்த வேண்டும் என்பதே.

கல்விக் கொள்கையின் மூன்றாவது அம்சம் அண்மையில் இருந்து சூழலை நோக்குவதே. மனிதனின் இயற்கைத் தன்மையை அவனது சூழல்/ பரம்பரை, தேசம் இவற்றை அடிப்படையாக கொண்டு சுதந்திரமான இயற்கையான சூழலில் உண்மையான முறையில் அபிவிருத்தியடையச் செய்வதாகும்.

மனிதனின் அதிகார வரம்பு உடல் நலத்திலே தங்கியுள்ளது. அவனிடம் தானாகவே தனது வேலைகளைச் செய்யக்கூடிய பண்பு ஏற்பட வேண்டும் வெளியிலிருந்து எதனையும் மூளைக்குள் திணிக்க முடியாது. மனம் விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடிய இயற்கையானதும், சுதந்திரமானதுமான வளர்ச்சியை ஏற்படுத்துவதே எதிர்பார்க்கும் வளர்ச்சியாகும்.

**உடற்கல்வி**

எல்லா உடல் சார்ந்த கல்வி முறையும், கடுமையானதும் நற்பயன் அளிக்கக் கூடியதும் திட்டமிட்ட முறையில் தூர சிந்தனையுடன் செயல்படக்கூடியதாக உள்ளது.

**உயிரியல் கல்வி**

கல்விக் கொள்கையில் இரண்டு முக்கிய அடிப்படைகள் உள்ளன. இவைகளை அடையும் முறைகள் வித்தியாசமாக உள்ளன. இரண்டும் முக்கியமானவை. புலன் உறுப்புகளை வளர்ப்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது நோக்கம் அறிந்தவற்றை உச்சநிலையில் அறிந்து அதனைப் பயன்படுத்துவதாகும்.

**உளவியல் மனோதத்துவக் கல்வி**

விவேகமுள்ள கல்வி முறையானது முதலில் உண்மைகளை அறிந்து சரியான முடிவுகளை எடுப்பதாகும்.இரண்டாவது சரியான முறையில் சிந்தனையை மேற்கொள்வதாகும். மூன்றாவது அறிந்தவற்றை பொது நன்மைகளுக்காகப் பயன்படுத்துவதாகும்.

நீங்கள் மிக அவசரமாகவும் அவசியமாகவும் செய்ய வேண்டியுள்ள பணி யாதெனில் / குழந்தைகளுக்குத் தம்மைத் தாமே புரிந்து கொள்ளச் செய்யவும். தமது விதியைத் தாமே தெரிவு செய்து கொள்ளவும் தாம் பின்பற்றிச் செல்லவுள்ள வழியைத் தெரிவு செய்து கொள்ளவும் எதிர்காலத்தில் தாம் எப்படிப்பட்டவராக வர விரும்புகிறாரோ அதனை அடைவதற்கு உறுதி பூணவும் கற்பிப்பதற்கு விருப்பை ஏற்படுத்துவதும், எல்லா நேரத்திலும் எல்லா இடத்திலும் கற்பதற்கான விருப்பத்தை உண்டாக்குவதே ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு வழங்கக் கூடிய மிக உயர்ந்த சன்மானமாகும்.

ஒழுக்கப் பயிற்சியில் முதலாவது திட்டம் கருத்துப் பரிமாறல், கருத்தைத் தெரிவிக்க அழைத்தல் என்பன குழந்தைகளுக்குத் தமது கருத்தைத் தெரிவிக்க இடமளிக்கப்படல் வேண்டும். ஆசிரியர்கள் தமது கருத்துக்களை பலாத்காரமாகக் குழந்தைகளிடம் திணிக்கவோ, போதிக்கவோ கூடாது. குழந்தைகளுக்குப் போதிக்கக் கூடிய மிகச் சிறந்த வழி ஆசிரியரின் முன் மாதிரியான வாழ்வு, கலந்துரையாடல், வாசிப்பதற்குப் பொருத்தமான அறிவுரை நூல்கள்.

**உளவியல் கல்வி**

விவேகமுள்ள கல்வி முறையானது முதலில் உண்மைகளை அறிந்து சரியான முடிவுகளை எடுப்பதாகும். இரண்டாவது, சரியான முறையில் சிந்தனையை மேற்கொள்வதாகும். மூன்றாவது அறிந்தவற்றை பொது நன்மைகளுக்காகப் பயன்படுத்துவதாகும்.

குழந்தைகள் மூத்தோர், பெரியோர் முன்னிலையில் தரக்குறைவான அல்லது மரியாதைக் குறைவாக நடப்பது போன்று அல்லது பேசுவது போன்று தோன்றினாலும் அது அவர்களின் முதிர்ச்சியடையாத மனோ எழுச்சியின் செயற்பாடுகளாகும். அவற்றை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடுவதோ அடக்கி ஒடுக்கி வாய்ப்பூட்டுப் போடுவதோ உகந்த செயல் அன்று. அவர்களின் அச்செயற்பாடுகளை நெறிப்படுத்துவதோ, தூய்மைப்படுத்துவதோ பெரியோரின் அல்லது ஆசிரியர்களின் பணியாகும்.

**உமக்கு உமது வாழ்வில் எதைச் செய்ய வேண்டுமானாலும் அதற்கு**

நிச்சயம் தேவைப்படும் அடிப்படையான தொன்றுள்ளது. அதுதான் உமது புலனடக்கம் அல்லது மன ஒருமைப்பாடு. மன ஒருமைப்பாட்டை நிலை நிறுத்திக் கொள்ள முடிந்தவருக்கு மனத்தின் உள்ளிருந்தோ வெளியில் இருந்தோ எந்தச் சக்தியும் சவால் விட முடியாது. உடல் ரீதியான அபிவிருத்திக்கு மன ஒருமைப்பாடு மிக இன்றியமையாதது. இப்படிச் சொல்வதனால் எல்லா நேரத்திலும் ஒரே கருமத்தில் மன ஒருமைப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்பது எனது வேண்டுகோள் அல்ல. நான் சொல்ல விரும்புவதெல்லாம் மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கான பயிற்சி நாளாந்தம் இடம் பெறல் வேண்டுமென்பதேயாகும். இப்பயிற்சி நாளடைவில் கல்வி, விளையாட்டு, உடல், உள அபிவிருத்திக்கு மட்டுமல்ல மூளை வளர்ச்சிக்கும் சிந்தனா சக்தியின் வளர்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. மனிதனுக்குள்ள உயர்ந்த கௌரவம் அல்லது மதிப்பு அவனது கவனத்துக்கு அல்லது அவதானத்துக்குக் கொடுக்கப்படும் மதிப்புக்குச் சமமாகும்.

## ஆசிரியர்

ஆசிரியர் சிறார்களுக்கு எல்லாவற்றையும் பற்றி வழிகாட்ட வேண்டும். அவர்களின் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர வேண்டும். அத்தோடு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முன்வர வேண்டும். இது விசேட பெறுமதியைக் கொடுக்கின்றது.

நாம் இப்புவியில் வாழ்வது முன்னேற்றத்துக்கே. நாம் எல்லாவற்றையும் கற்க வேண்டும். ஆசிரியர் மாணவர்களிடத்தில் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

அநேகமான ஆசிரியர்கள் நற்சிறார்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் உள்ளனர். இதற்காக இவர்கள் ஆற்றலும் விளங்கிக் கொள்ளும் தன்மையும் கேள்விகளுக்கு விடையளிக்கும் தன்மைகளை உடைய மாணவர்களைத் தெரிவு செய்து கொள்கிறார்கள். இது முற்றிலும் தவறானது. இம்முறை எல்லாவற்றையும் வீணாக்கி விடுகின்றது. மாணவர்கள் புத்தகங்கள் மூலம் அறிவைப் பெறுகிறார்கள்.அவர்கள் புத்தகங்களை நம்பி இருக்கிறார்கள். பாடங்களை மனனஞ் செய்வதைவிட சிறந்த முறையில் விளங்கிக் கொள்ளும் ஆற்றலை வளர்ப்பதினை ஆசிரியர் வலியுறுத்த வேண்டும். ஒருவன் சிறந்த முறையில் விளங்கிக் கொண்டதையே அவன் சரியான முறையில் அறிந்து கொள்கிறான். இயந்திர மூளைகள் மாதிரி மனனஞ் செய்தவற்றை காலப் போக்கில் மறந்துபோய் விடுகின்றான். நல்ல முறையில் விளங்கிக் கொண்டவை ஒரு போதும் மறந்து போவதில்லை. ஆசிரியர் ஒரு போதும் ஏன்? எப்படி? என்பவற்றை விளக்குவதற்கு மறுக்கக் கூடாது. உங்களுக்கு விளக்க முடியாவிட்டால் தகுதியான ஒருவரை நாட வழி செய்யுங்கள்.

ஆசிரியரிடம் அதிக பொறுமை அவசியம் இருக்க வேண்டும். அவர் ஒரு விடயத்தை பலமுறை, பல வழிகளில் விளங்கப்படுத்த வேண்டும். அப்பொழுது தான் அது மாணவர்கள் மனதில் படிப்படியாகப் பதியும். விவேகமும் விளங்கிக் கொள்ளும் தன்மையும் முக்கியம்தான்.

மாணவனின் சாதாரண திறமைகளை மதிப்பீடு செய்வது அவ்வளவு பிரயோசனம் அளிக்கக் கூடிய முறையல்ல. இயற்கையாக குழப்பஞ் செய்யக் கூடிய ஒழுக்கமற்ற. பிடிவாதமுள்ள தன்மைகளை எப்படி பயன்படுத்துவது என்பதை யாரும் அறியார்.

பல்வேறு தன்மைகளை உடைய மாணவர்களை அறிந்து ஆசிரியர் கடுமையாகச் செயல்பட வேண்டும்.

சிறு குழந்தைகளுக்குக் கல்வியூட்டுதல் இலகுவான காரியமல்ல. ஆசிரியரிடம் மிகப் பொறுமை அவசியம். ஒரு பாடம் அவர்களுக்குப் புரியாதவிடத்து பல தடவை சொல்லி சொல்லி விளங்க வைக்க வேண்டும். பலமுறைகளைப் பயன்படுத்தி அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். சிறுவர் மனதில் பதிய வைக்க படிப்படியாக

விளக்குதல் வேண்டும். இவற்றுக்குப் பொறுமை தேவை. எனவே ஆசிரியரின் பண்புகளில் ஒன்று பொறுமையுள்ளவராய் இருத்தலாகும்.

பிள்ளை ஒரு செயலைப் படிமுறையாகச் செய்வதை விட மிகவும் தேவைப்படுவது புரிந்து தெரிந்து செயல்படுவதாகும். எனவே ஆசிரியர் பிள்ளைகளுக்கு விளங்கவைத்தல் மிக இன்றியமையாதது. விளங்கிக் கொண்டால் படிமுறையைத் தானாகவே பின்பற்றுவான்.

குழந்தையிடத்தே வளர்ச்சிபெற வேண்டும் என எதிர்பார்க்கும் நற்குணசீலங்களின் பிரதிபிம்பமாக ஆசிரியர் இருத்தல் வேண்டும். இவை எல்லாம் ஆசிரியரிலேயே தங்கியுள்ளது.

ஏழு வயது வரும் வரை குழந்தைகள் தாமாக விளையாடி மகிழ இடம் கொடுத்தல்/ பாடசாலையில் கற்பித்தல் எல்லாமே விளையாட்டாக இடம்பெற வேண்டும். அவர்கள் அந்த விளையாட்டின் மூலமே கற்றுக் கொள்வர். விளையாடும் போதே குழந்தை கற்பதற்கும் அறிவதற்கும், வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்கும் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளும். இச்சந்தர்ப்பத்தில் கற்றுக் கொள்ளும் முறை முக்கியமானதல்ல. ஆசிரியரின் மனப்பாங்கு மிகப் பிரதானம். ஆசிரியர் மற்றவர்களின் நெருக்குதலுக்கு அல்லது தூண்டுதலுக்குட்பட்டு வேலை செய்பவராக இருத்தல் கூடாது. ஆசிரியர் குழந்தைகளுக்கு உதவி/ஒத்தாசை செய்வதனால், மகிழ்ச்சியூட்டுவதனால் எப்பொழுதும் குழந்தையின் அன்புரிக்குரியவராவார். பிள்ளைகளுக்கு அடிப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. எவ்வகையிலாவது பிள்ளையை அறைவது தடுக்கப்பட்டுள்ளது. மிகச் சிறிய அளவில் கன்னத்தில் அறைவதோ நட்பு ரீதியில் குத்துவதோ குற்றமாகும். பிள்ளை கீழ்ப்படியாமல் இருப்பதனாலோ, விளங்கிக் கொள்ளாமல் இருப்பதனாலோ, அல்லது மற்றையோரைத் தொந்தரவு செய்வதனாலோ பிள்ளையைத் தண்டிப்பதும் குற்றமாகும். இது சுய கட்டுப்பாட்டை இழப்பதையும் மாணவர் ஆசிரியர் இருவருக்குமே கெடுதியை விளைவிக்கும்.

தேவைப்படின் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கலாம். எனினும் இது அமைதியாக நடைபெறவேண்டுமே தவிர தனிப்பட்ட குரோதத்தினால் இடம்பெறக் கூடாது.

ஆறு வயதுக்குட்பட்ட சிறு பிள்ளை தான் மற்றவர்களுக்கு விளக்கிக் காட்டக் கூடியவற்றை விட அதிகமான அளவில் விடயங்களை அறிந்துள்ளது என்பதை ஒரு போதும் மறந்து விடக் கூடாது.

மிகவும் சக்தியுள்ள ஆலோசகர் ஓர் உதாரணமாக விளங்குவார். நீங்கள் ஒழுக்கக் கட்டுப்பாட்டைக் கொண்டிராவிடில், அதனைப் பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. அமைதியாகவும், ஒழுங்காகவும், ஒழுங்கமைப்பாகவும் தேவையற்ற வீண் சொற்களைத் தவிர்த்தும் இருப்பது ஆசிரியர்கள் கடைப்பிடிக்க

வேண்டிய பண்பாகும். இவ்வாறு அமைந்திருந்தால் மட்டுமே அவற்றைப் பிள்ளைகளிடமிருந்தும் எதிர்பார்க்கலாம்.

பாடசாலையானது மாணவர்களும் ஆசிரியர்களும் முன்னேற்றமான செயல்களைப் புரிவதற்கு வழிவகுக்கும் இடமாகும். ஒவ்வொருவரும் இலகுவான இயல்புகளை வளர்த்துக் கொள்வதற்கான சுதந்திரம் இருத்தல் அவசியமாகும்.

வெளியீடு
ஸ்ரீ லங்கா யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு
இல. 23, வெஸ்லி ரணகல மாவத்தை,
கொழும்பு 08

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.